1973 நவம்பர் 22]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

*** 311 விஞ—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடை யளிப்பாரா—

(மாயூரம்) மணல்மேட்டிலிருந்து இலுப்பப்பட்டு வழியாக பாப்பாக்குடி கொள்ளிடக்கரை வரை செல்லும் பாதையை செப்பனிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இச்சாலையின் ஒரு பகுதி அதாவது கிலோ மீட்டர் 0/0 முதல் 11/6 வரை நல்ல நிலையில் உள்ளது. கிலோ மீட்டர் 11/6 முதல் 13/2 வரை உள்ள மற்ற பகுதியை செப்பனிடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் 1971-72-ம் ஆண்டில் மாயூரம் தாலுக்காவில், குறிப்பாக மாயூரம் தொகுதியில் மாப்படுகையிலிருந்து கடலங்குடி வரையில் ஏறத்தாழ பத்து மைல் நீளமுள்ள பஞ்சாயத்து யூனியன் சாலையை நெடுஞ்சாலைத் துறையின் பொறுப்பில் சேர்த்துக்கொண்டிருப்ப தாகச் சொன்னார்கள். ஆனால், அந்தச் சாலை, பல முறை வேண்டுகோள் விடப்பட்டும் இன்னும் செப்பனிடப்பட முடியாமல் அல்லது செப்பனிடப்படாமல் இருப்பதால் பஸ் போக்குவரத்து தடைப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? தயவுசெய்து மீண்டும் அதனைப் புனர் பரிசீலனை செய்து விரைவில் அது செய்து முடிக்கப்பட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதுபற்றி தனியாக எழுதி யனுப்பினால் கவனிக்கலாம்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாயூரம் நகரிலுள்ள இரண்டாம் எண் நெடுஞ்சாலையில் தற்போது போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பதைக்கருதி, மிகக் குறுகலாக இருக்கும் அந்த நெடுஞ்சாலையை அகலப்படுத்தவேண்டுமென்று நீண்ட நாளாக அந்தப் பகுதி மக்கள் விரும்பி நகராட்சியிடம் வற்புறுத்தி வருகிறார்கள். எனவே, நகராட்சிமன்றம் அவர்கள் முறைப்படி தா

[1973 நவம்பர் 22

வேண்டிய 25 சதவீதப் பணத்தைத் தந்தால் அரசு உடனடியாக அதனை அகலப்படுத்த ஆவன செய்யுமா? தக்க நடவடிக்கை மேற்கொள்ள முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இதற்கு சுமார் நான்கு இலட்ச ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனால், அரசாங்கத்திடம் இப்பொழுதிருக்கிற எந்தத் திட்டத்திலும் இது சேர்க்கப்படவில்லை. நிதி நிலை சரியானதற்குப் பிறகு இதுபற்றி யோசிக்கலாம்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, மணல்மேட்டிலிருந்து இலுப்பப்பட்டு வழியாக பாப்பாக்குடி கொள்ளிடக்கரை வரையில் செல்லும் அரசினர் நெடுஞ்சாலை நீண்டகாலமாக அரசினர் நெடுஞ் சாலையில் சேர்க்கப்பட்டிருந்தும் 1967 ஆம் ஆண்டுக்குப் பிறகு பல முறை வலியுறுத்தப்பட்டிருந்தும் இன்னும் அது கவனிக்கப்பட முடியாத அல்லது இயலாத நிலையில் இருக்கிறது. ஆகவே, தயவு செய்து அமைச்சரவர்கள் இனிமேலாவது நடவடிக்கை மேற் கொள்ள தொடர்புடைய அதிகாரிகளை வற்புறுத்துவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இதற்கான திட்டத்தின்கீழ் 70,000 ரூபாய் மதிப்பிடப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது பரிசீலனையில் இருந்து வருகிறது. சீக்கிரத்தில் முடிவெடுக்கப்படும்.

திரு. எஸ். வடிவேல்: தலைவரவர்களே, பல ஆண்டுகளாக கொள்ளிடக் கரையை சீர் செய்யாமல் வேலைகள் பாதிக்கப்படு கிறது. அது அந்தப் பகுதியிலுள்ள மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருப்பதால் அரசு துரிதமாக நடவடிக்கை எடுத்து அதைச் சீர்செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: திட்டம் வந்திருக்கிறது என்று சொன்னேன். பரிசீலனையில் இருக்கிறது. முடிவு சீக்கிரத்தில் எடுக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. வடிவேல் அவர்கள் எழுப்பிய கொள்ளிடக் கரையை சீர் செய்து பாதையைச் செப்பனிடுவதற்கான திட்டம் பற்றிய வினாவிற்கு திட்டம் வந்திருக்கிறது, முடிவு சீக்கிரம் எடுக்கப்படும் என்று

1973 நவம்பர் 22]

சொன்னர்கள். ஆனல் என்னுடைய கேள்வி, மணல்மேட்டிலிருந்து இலுப்பப்பட்டு வழியாக பாப்பாக்குடி கொள்ளிடக்கரை வரை செல்லும் பாதையைப் பற்றிய கேள்வி. எனவே அவர்கள் இன்னெரு அதிகமான வாக்குறுதியைத் தந்திருக்கிறர்கள். அந்தச் சாலையையும், மாண்புமிகு உறுப்பினர் திரு. வடிவேல் அவர்கள் கேட்ட அந்த கொள்ளிடக்கரையைப் பற்றியும் அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வடிவேல் அவர்கள் கேட்ட கேள்வியை, மணல்மேட்டிலிருந்து இலுப்பப்பட்டு வழியாக பாப்பாக்குடி கொள்ளிடக்கரை வரை செல்லும் பாதையைப்பற்றி என்று கருதித்தான் அந்தப் பதிலைச் சொன்னேன். இதற்குத்தான் 70,000 ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வடிவேல் அவர்கள் கேட்ட கேள்விபற்றித் தனியாகக் கேள்வி போட்டால் பதில் தர முடியும். இதையே திரு கிட்டப்பா அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கும்பகோணம்-திருவாரூர் சாலை

*** 312 வின—திரு. கு. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணத்திலிருந்து திருவாரூர் செல்லும் சாலையினை நேராக அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, கும்பகோணத்திலிருந்து திருவாரூர் செல்லும் சாலை வளைந்து வளைந்து செல்கிறது. இதனல் விபத்துகள் ஏற்பட வாய்ப்பாக உள்ளது. ஆகவே அந்தச் சாலையை நேராகப் போடுவதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?